# Current Affairs - April - 2016

## முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| ஏப்ரல் 1 | April Fool's Day (முட்டாள்கள் தினம்) |
| 2 | World Autism Awareness Day (உலக மன இருக்க விழிப்புணர்வு தினம்) |
| 4 | International Day for Mine Awareness and Assistance in Mine Action<br>World Rat Day |
| 5 | National Maritime Day (தேசிய கடல்சார் தினம்)<br>சம்தா திவாஸ்<br>பாபு ஜக்ஜீவன் ராமின் பிறந்த தினம் |
| 6 | International Day for Sport for Development and Peace (அமைதி மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச விளையாட்டு தினம்) |
| 7 | World Health Day (உலக ஆரோக்கிய தினம்) |
| 10 | World Homeopathy Day (உலக ஹோமியோபதி தினம்)<br>Birthday of Samuel Haneman (சாமுவல் ஹானாமன் பிறந்த தினம்) |
| 11 | World Parkinson Disease Day<br>National Safe Motherhood Day |
| 12 | International Day for Human Space Flight |
| 13 | Jallianwala Bagh Massacare Day (ஜாலியன்வாலாபாக் படுகொலை தினம்) |
| 14 | Dr. BR Ambedkar Rememberance Day (அம்பேத்கர் பிறந்த தினம்) |
| 17 | World Haemophilia Day (உலக இரத்த உறையாமை நோய் தினம்) |
| 18 | World Heritage Day (உலக பாரம்பரியம் தினம்) |
| 21 | Indain Civil Services Day (இந்திய குடிமை பணிகள் தினம்) |
| 22 | International Mother Earth Day (சர்வதேச புவி தினம்) |
| 23 | World Book and Copyright Day (உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்)<br>English Language Day (ஆங்கில மொழி தினம்) |
| 24 | Panchayat Diwas (தேசிய பஞ்சாயத்து தினம்) |
| 25 | World Malaria Day (உலக மலேரியா தினம்) |
| 26 | World Intellectual Property Day (உலக அறிவுசார் உடைமை தினம்) |
| 28 | World Day for Safety and Health at Work (பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்திர்கான உலக தினம்)<br>International Commemoration Day for Dead and Injured Workers |
| 29 | International Day of Rememberance for all victims of Chemical Warfare<br>International Dance Day (சர்வதேச நடன தினம்)<br>World Wish Day |
| 30 | International Jazz Day |
| 24 – 30 | World Immunization Week (உலக நோய்த்தடுப்பு வாரம்) |
| 19 – 23 | Global Soil Week (உலக மண் வாரம்) |
| Last Sunday of April | World Veterinary Day |

www.tnpscwinners.com

# Current Affairs - April - 2016

## சுருக்கச்சொற்கள்

| | |
|---|---|
| UJALA | Unnat Jyoti by Affordable LEDS for All |
| DELP | LED based Domestic Efficient Lightning Programme |
| NABARD | National Bank for Agriculture and Rural Banking |
| IRNSS | Indian Regional Navigational Satellite System |
| NOC NOAPS | NOC Online Application and Processing System |
| DIPAM | Department of Investment and Public Asset Management |
| SAWEN | South Asia Wild Life Enforcement Network |
| ASEAN | Association of South East Asian Nations |
| NASSCOM | National Association of Software and Services Companies |
| SIPRI | Stockholm International Peace Research Institute |
| IASST | Institute of Advance Study in Science and Technology, Guwahati, Assam |
| LIGO | Laser Inferometer Gravitational Wave Observatory |
| UNIDO | United Nations Industrial Development Organisation |
| SVEEP | Systematic Voter's Education and Electoral Participation |

## 2016 உலக பத்திரிக்கை சுதந்திர குறியீடு (2016 World Press Freedom Index)

- உலகில் உள்ள 180 நாடுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த குறியீட்டு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.
- இதன் படி உலகின் பத்திரிக்கை சுதந்திரம் அதிகம் உள்ள நாடாக "பின்லாந்து" உள்ளது.
- முதல் இடம் = பின்லாந்து, இரண்டாவது இடம் = நெதர்லாந்து, மூன்றாவது இடம் = நார்வே, நான்காவது இடம் = டென்மார்க்.
- இந்தியா இப்பட்டியலில் 133வது இடத்தை பிடித்துள்ளது. 2015ம் ஆண்டின் 136வது இடத்தில இந்தியா இருந்தது.
- 178வது இடம் = துருக்மெனிஸ்தான், 179வது இடம் = வடகொரியா, 180வது இடம் = எரித்ரியா.

## லாரியஸ் உலக விளையாட்டு விருதுகள் 2016 - Laureus World Sports Awards 2016

- இவ்வாண்டின் சிறந்த ஆண் விளையாட்டு வீரர் = டென்னிஸ் வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிக் (2வது முறையாக இதனை வெல்கிறார்).
- இவ்வாண்டின் சிறந்த பெண் விளையாட்டு வீரர் = டென்னிஸ் வீராங்கனையான, அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் (4வது முறையாக இதனை வெல்கிறார்).
- இவ்வாண்டின் சிறந்த அணி = நியுசிலாந்து நாட்டின் தேசிய ரக்பி அணி.
- ஊனமுற்றோர் பிரிவில் இவ்வாண்டின் சிறந்த வீரர் = நீச்சல் வீரரான பிரேசிலின் டேனியல் டயஸ்.
- வாழ்நாள் சாதனையாளர் விருது = முன்னாள் பார்முலா ஒன் கார் ஓட்டுனரான ஆஸ்திரேலியாவின் நிகி லவுடா.

## உலகளாவிய உலகின் முதல் 50 எதிர்கால பொருளாதார நகரங்கள் DELL's Global Top 50 Future Ready Economies

| | |
|---|---|
| 1 = அமெரிக்காவின் சான் ஜோஸ் நகரம் | இப்பட்டியலில் இடம் பிடித்துள்ள ஒரே இந்திய நகரம், புது தில்லி ஆகும். 44 வது இடத்தை பிடித்துள்ளது. |
| 2 = அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ | |
| 3 = சிங்கப்பூர் | |

www.tnpscwinners.com

## தொழில் ரீதியான ஆசியாவின் 50 அதிகாரம்மிக்க பெண்கள் - Forbes's Asia's 50 Power Business Women List:

| இடம் | பெயர் |
|---|---|
| 1 | நிதா அம்பானி, அம்பானி குழுமம் |
| 2 | அருந்ததி பட்டாசாரியா, பாரத ஸ்டேட் வங்கி தலைவர் |
| 14 | அம்பிகா தீரஜ், மியு சிக்மா நிறுவனம் |
| 16 | தீபாலி கோயங்கா, வெல்ஸ்பன் இந்தியா நிறுவனம் |
| 18 | வினிதா குப்தா, லூபின் நிறுவனம் |
| 22 | சாந்தா கோச்சர், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி தலைவர் |
| 26 | வந்தனா லுத்ரா, வி.எல்.சி.சி நிறுவனம் |
| 28 | கிரண் மசும்தர் ஷா, பையோகான் நிறுவனம் |

## சிப்ரி - உலக ராணுவ செலவின அறிக்கை (SIPRI's World Military Expenditure)

| இடம் | நாடு | இடம் | நாடு |
|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 4 | ரஸ்யா |
| 2 | சீனா | 5 | இங்கிலாந்து |
| 3 | சவூதி அரேபியா | 6 | இந்தியா (2015ம் ஆண்டின் 51 பில்லியன் அமேரிக்க டாலர் ரூபாய் செலவளித்துள்ளது) |
| SIPRI = Stockholm International Peace Research Institute | | | |

## தேசிய கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு தரவரிசை - National Institutional Ranking Framework (NIRF Survey)

**இந்தியாவின் முன்னணி 5 பல்கலைக்கழகங்கள்:**

- ✓ இந்திய அறிவியல் கல்வி நிலையம், பெங்களூரு (IIS, Bengaluru)
- ✓ மும்பையில் உள்ள வேதியியல் தொழில்நுட்ப பல்கலைகழகம் (Institute f Chemical Technology, Mumbai)
- ✓ புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (Delhi Jawaharlal Nehru university)
- ✓ ஹைதராபாத் பல்கலைக்கழகம் (Hyderabad University)
- ✓ தேஜ்பூர் பல்கலைக்கழகம் (Tezpur University)

**இந்தியாவின் முன்னணி 5 பொறியியல் கல்வி மையங்கள்:**

- ✓ மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப கல்வி மையம் (IIT, Madras)
- ✓ இந்திய தொழில்நுட்ப கல்வி மையம், பாம்பே (IIT Bombay)
- ✓ இந்திய தொழில்நுட்ப கல்வி மையம், கரக்பூர் (IIT Kharagpur)
- ✓ இந்திய தொழில்நுட்ப கல்வி மையம், டெல்லி (IIT Delhi)
- ✓ இந்திய தொழில்நுட்ப கல்வி மையம், கான்பூர் (IIT Kanpur)

**இந்தியாவின் முன்னணி 5 மேலாண்மை கல்வி நிறுவனங்கள்:**

- ✓ இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், பெங்களூரு (IIM Bangalore)
- ✓ இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், அகமெதாபாத் (IIM Ahmedabad)
- ✓ இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், கல்கத்தா (IIM Calcutta)
- ✓ இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், லக்னோ (IIM Lucknow)
- ✓ இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், உதய்பூர் (IIM Udaipur)

www.tnpscwinners.com

## பிரதமரின் பெல்ஜியம், அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா பயணம்:

**பெல்ஜியம்:**

- ✓ ப்ருச்செல்ஸ் நகரில் உள்ள ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ தலைமையகத்திற்கு விஜயம்
- ✓ 13வது இந்திய - ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டில் பங்கேற்றார் ($13^{th}$ India – EU Summit)
- ✓ பெல்ஜியத்தில் இருந்தபடியே, இந்தியாவின் நைனிடால் பகுதியில் அமைக்கப்பட்ட ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கியை தொடங்கி வைத்தார்

**அமெரிக்கா:**

- ✓ வாஷிங்டன் நகரில் நடைபெற்ற 4வது அணு பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்றார் ($4^{th}$ Nuclear Summit, Washington)
- ✓ "லிகோ" (LIGO) மையத்தை இந்தியாவில் அமைக்க அமெரிக்காவுடன் புரிந்தணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் (LIGO – Laser Inferometer Gravitational Wave Observatory)

**சவூதி அரேபியா:**

- ✓ சவூதி மன்னருடன் சந்திப்பு
- ✓ ரியாத் நகரில் உள்ள பெண்கள் மட்டுமே பணிபுரியும் டி.சி.எஸ் நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப மையத்திற்கு விஜயம் செய்தார்
- ✓ ரியாத் நகரில் உலா மஸ்மாக் கோட்டையை சுற்றி பார்த்தார்
- ✓ ரியாத் நகரில் நடந்த விழாவில், அந்நாட்டின் உயரிய விருதான, "அப்துல்அசிஸ் சாஸ்" விருது பிரதமருக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது.
- ✓ சவூதி மன்னர் அப்துல்அசிஸ் அல் சவுத் அவர்களுக்கு, இந்திய பிரதமர், தங்க முலாம் பூசப்பட்ட சேரமான் ஜும்மா மசூதியின் அசல் பிரதியை வழங்கினார். இந்த சேரமான் ஜும்மா மசூதி, கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தில் உள்ளது. இதுவே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் மசூதி என நம்பப்படுகிறது. (இதி குறிப்பிடப்படும் சேரமான், என்பது, சேர மன்னர் பெருமாள் நாயனார் ஆவார்)

## உலகின் முதல் வெள்ளைப் புலிகள் சபாரி:

- ✓ மத்தியப்பிரதேச மாநில, சத்னா மாவட்டத்தில் உள்ள முகுந்த்பூர் விலங்குகள் பூங்காவில், உலகின் முதல் வெள்ளைப் புலிகள் சபாரி (வெள்ளை புலிகள் வாழிடம்) உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ இதில் முதலில் 3 வெள்ளை புலிகள் விடப்பட்டுள்ளன. ஒரு ஆண் புலிக்கு ரகு பெயரிட்டுள்ளனர். 2 பெண் புலிகளுக்கு, விந்தியா மற்றும் ராதா எனப் பெயரிட்டுள்ளனனர்.
- ✓ முதன் முதலில் வெள்ளைப் புலி, மத்தியப் பிரதேச மாநில விந்தியா பகுதிகளில் 1915களில் கண்டறியப்பட்டது
- ✓ அப்புலியும் 1920ம் ஆண்டு இறந்து விட்டது
- ✓ 1951ம் ஆண்டு, ரேவா பகுதியின் மகாராஜாவான மார்த்தன்ட் சிங் என்பவரால், ஒரு வெள்ளைப் புலி கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு "மோகன்" எனப்பெயரிட்டு வளர்த்தார். தற்போது உலகில் உள்ள அணைந்து வெள்ளைப் புலிகளுமே, இந்த "மோகன்" வெள்ளைப் புலியின் வழியில் வந்தவைகளே.
- ✓ இந்த வெள்ளைப் புலிகளின் வெள்ளை நிறத்திற்கு காரணமான நிறமிகள் = "பியோமெலனின்" ஆகும் (Pheomelanin)

## உலக இணைப்பு குறியீடு 2016 (Global Connectivity Index 2016)

| | |
|---|---|
| முதல் இடம் - அமெரிக்கா | சென்ற வருடம் 44வது இடத்தில இருந்த இந்தியா இந்த வருடமும் அதே 44வது இடத்தில உள்ளது. |
| இரண்டாவது இடம் - சிங்கப்பூர் | |
| மூன்றாவது இடம் = ஸ்வீடன் | |
| • உலக இணைப்பு குறியீடு, உலக நாடுகள் டிஜிட்டல் முறையில் தங்களை மேம்படுத்திக் கொண்டு, மக்களை எப்படி இணைந்துள்ளது என்பதை கண்டு இக்குறியீடு உருவாக்கப்பட்டது | |

www.tnpscwinners.com

# Current Affairs - April - 2016

## இந்தியா

- ❖ வணிக நோக்கில் இனப்பெருக்கம் செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து நாய்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது

---

- ❖ உலக ஊக்க மருந்து தடுப்பு மையம், வெளியிட்ட அறிக்கையின் படி, விளையாட்டு வீரர்கள் அதிகளவில் ஊக்க மருந்து பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில், இந்தியா 3வது இடத்தில் உள்ளது
- ❖ முதல் இடம் = ரஷ்யா, இரண்டாவது இடம் = இத்தாலி

---

- ❖ புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், பல்வேறு பொருட்கள் சேதமடைந்தன.
- ❖ இந்த அருங்காட்சியத்தில் இருந்த பழமையான டைனோசரின் எலும்பு கூடுகளும் சேதமடைந்தன.

---

- ❖ மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம், தேசிய நினைவு சின்ன ஆணையத்திற்காக (National Monuments Authority), "NOC NOAPS" என்ற இணையதள சேவையை தொடங்கியுள்ளது
- ❖ இதற்கான இணையதளம் = www.nmanoc.nic.in
- ❖ NOC NOPAS = NOC Online Application and Processing System

---

- ❖ குடியரசுத்தலைவர் ராஜ்யசபாவிற்கு 6 உறுப்பினர்களை புதிதாக நியமித்துள்ளார்.
- ❖ இந்திய அரசியல் அமைப்பு சட்ட விதி 80(3)ன் படி, இலக்கியம், கலை, அறிவியல் மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் பிரபலமானவர்களை குடியரசுத்தலைவர் நேரடியாக நியமிக்கலாம்
- ❖ 1 = சுப்பிரமணியன் சுவாமி (அரசியல், பி.ஜே.பி கட்சி)
- ❖ 2 = நரேந்திர ஜதாவ் (பொருளாதாரம், முன்னாள் திட்டக்குழு உறுப்பினர்)
- ❖ 3 = நவ்ஜோத் சிங் சித்து (விளையாட்டு, கிரிக்கெட்)
- ❖ 4 = சுரேஷ் கோபி (நடிகர், கேரள சினிமா)
- ❖ 5 = ச்வபான் தாஸ்குப்தா (பத்திரிக்கை)
- ❖ 6 = மேரி கோம் (விளையாட்டு, குத்துச்சண்டை)

---

- ❖ மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் போன்றோருக்கு தங்கள் குறைகளை தெரியப்படுத்த வசதியாக, "ட்விட்டர் சேவா" (Twitter Seva) என்ற புதிய சேவையை தொடங்கியுள்ளது

---

- ❖ சமிபத்தில் வெளியிடப்பட்ட ஆய்வின் படி, இந்திய பொருளாதாரம் 10% வளர்ச்சியில் தொடர்ந்து பயணித்தால், 2032ம் ஆண்டு இந்தியா வறுமை இல்லாத நாடாகவும் (Eliminate poverty by 2032), பத்து ட்ரில்லியன் டாலர் அளவிற்கு பொருளாதாரம் உள்ள நாடாகவும் மாறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

- ❖ மத்திய அரசு, பங்கு முதலீட்டை திரும்பப் பெரும் துறையை, "முதலீடு மற்றும் பொது சொத்து நிர்வாகத் துறை" (DIPAM) என பெயர் மாற்றம் செய்துள்ளது
- ❖ DIPAM = Department of Investment and Public Asset Management

---

- ❖ மகராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற திரிம்பகேஸ்வரர் கோவிலின் மூலஸ்தானத்தை சென்று வழிபட பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய சமூக மாற்றமாகும்.

---

- ❖ ஹிமாச்சலப் பிரதேச மாநில உயர்நீதிமன்றம், மத்திய அரசுக்கும், அம்மாநில அரசுக்கும் நோட்டிஸ் அனுப்பியுள்ளது. அம்மாநில அரசு, குரங்கினை, புழு இனத்தில் சேர்த்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் இந்நோட்டிஸ் அனுப்பப்பட்டுள்ளது

---

- ❖ மகாராஷ்டிரா மாநில அரசு, அம்மாநிலத்தில் ஏப்ரல் 18ம் தேதி முதல், 200 அடிக்கு மேல் போர்வெல் துளையிட



www.tnpscwinners.com

தடை விதித்துள்ளது. அம்மாநிலத்தில் நிலவும் கடும் வறட்சியை தொடர்ந்து இம்முடிவை அறிவித்துள்ளது.

---

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் ஓட்டுனராக பணியாற்றிய நிசாமுதீன், என்பவரே தர்ப்து உலகில் அதிக வயதில் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஆவார். அவருக்கு வயது 116.

---

- உலகின் மிகப்பெரிய மரச்சக்கரம், புதுதில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் அமைக்கப்பட உள்ளது (World's Largest Wooden Chakra or Spinning Wheel)

---

- மத்திய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சகம், ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடிய, "தாந்தியா தோப்", அவர்களின் நினைவை போற்றும் வகையில் 200 ரூபாய் நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளது. மெலுன் அவரின் உருவம் பொறித்த 10 ரூபாய் நாணயத்தையும் வெளியிட்டுள்ளது.

---

- கூகுள் நிறுவனம், இந்திய ரயில்வேயின் "ரயில்டெல்" அமைப்புடன் சேர்ந்து, இந்தியாவில் இலவச வை-பை சேவையை வழங்கி வருகிறது. இதன் படி இந்நிறுவனம் இச்சேவையை வழங்கும் இரண்டாவது ரயில் நிலையம் என்ற சிறப்பை, ஒடிஸா மாநில புவனேஸ்வர் ரயில் நிலையம் பெற்றுள்ளது. இத்திட்டம் முதலில் மும்பையில் தொடங்கப்பட்டது

---

- மத்திய அரசு, இந்தியாவை SAWEN அமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ளது. இதன்மூலம் இந்த அமைப்பில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது (South Asia Wild Life Enforcement Network)

---

- ஹரியான மாநில அரசு, அம்மாநிலத்தின் குர்கான் மாவட்டத்தை, "குருக்ராம்" எனவும், மேவாட் பகுதியை "நு" எனவும் பெயர் மாற்றம் செய்துள்ளது.

---

- கேரளா மாநிலத்தின், நடைபெற்ற திருவிழா தீ விபத்தின் காரணமாக, அம்மாநில உயர் நீதிமன்றம், மாலை முதல் காளை வரை வழிபாட்டு தளங்களில் அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்க தடை விதித்துள்ளது.
- இத் தீ விபத்து, கொல்லம் பகுதியில் உள்ள பிரபல புட்டிங்கள் தேவி கோவிலில் நடைபெற்றது.

---

- மகாராஜா ரஞ்சித் சிங்கின் உருவச்சிலை, பிரான்ஸ் நாட்டின் புனித ட்ரோபஸ் நகரில் நிறுவப்பட்டுள்ளது.

---

- மத்திய அரசு, குறைந்த செலவிலான நுண் சூரிய ஆற்றல் இயந்திரத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் பெயர், "சூரிய ஜோதி" (SURYA JOTHI). மின்சார செலவினை குறைக்கும் நடவடிக்கைக்கு இது உதவும்.

---

- பீகார் மாநில அரசு, அம்மாநிலத்தில் ஏப்ரல் 1ம் தேதி முதல் முழு மதுவிலக்கை அமல்படுத்தி உள்ளது. குஜராத், நாகாலாந்து மற்றும் மிசோராம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்து, பூரண மதுவிலக்கை அமல் படுத்தும் நான்காவது மாநிலம் பீகார் ஆகும்.

---

- இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 21ன் படி, ஒரு குற்றவியல் வழக்கை நீண்டகாலம் கிடப்பில் வைத்திருப்பது, அரசியல் அமைப்பு சட்டத்தை மீறுவதாகும் என டெல்லி உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

---

- இந்தியாவின் அதிவேக ரயிலான, "கட்டிமான் எக்ஸ்பிரஸ்" தனது சேவையை டெல்லி முதல் ஆக்ரா வரை தொடங்கியுள்ளது. மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கப்படுகிறது. (India's Fastest Train Gatimaan Express). 188 கிலோமீட்டர் பயணத்தை 101 நிமிடங்களில் கடந்தது.

---

- உலக சுகாதார நிறுவனம், "உலக நகர்புற நல அறிக்கையை" (Global Report on Urban


www.tnpscwinners.com

Health) வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி, இந்தியாவின் நகர்புற மக்கள் தொகை 2031ம் ஆண்டு 600 மில்லியனாக உயரும் என தெரிவித்துள்ளது.

- மேலும், உலகின் அதிகமான சாலை போக்குவரத்து விபத்துகளில், சென்னை நகரம் இரண்டாவது இடத்தில உள்ளது. முதல் இடத்தில பிரேசிலின் போர்டலாசா நகரம் உள்ளது.

---

- இந்தியாவில் அதிக சரக்குகளை கையாண்ட ரயில்வே மண்டலம் என்ற சிறப்பை, ஒடிசாவின் புவனேஸ்வர் நகரை தலைமை இடமாக கொண்டு செயல்படும், கிழக்கு ரயில்வே மண்டலம் பெற்றுள்ளது.

---

- 2017ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி முதல் வெளிவரும் அணைத்து புதிய செல்போன்களிலும், "அவசரகால பொத்தான்" (Panic Button) இடம் பெற வேண்டும் என மத்திய அரசு செல்போன் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது

---

- 2018ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி முதல் வெளிவரும் அணைத்து புதிய செல்போன்களிலும், "ஜி.பி.எஸ்" வசதி இருக்க வேண்டும் என மத்திய அரசு செல்போன் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

---

- வரனாசியை சேர்ந்த பெண் கதக்களி நடனரான, "சோனி சவ்ரசியா" என்பவர், தொடர்ந்து 124 மணி நேரத்திற்கு மேலாக நடனமாடி, புதிய கின்னஸ் சாதனையை நிகழ்த்தி உள்ளார்.

---

- ஆதார் ஆணையம், இந்தியாவில் 100வது கோடி ஆதார் அட்டையை உருவாக்கி உள்ளது. முதன் முதலில் 2010ம் ஆண்டு ஆதார் அட்டை வழங்கப்பட்டது.

---

- டெல்லி அரசு, அணைந்து வகையான புகையிலை பொருட்களுக்கும் ஒரு ஆண்டு தடை விதித்துள்ளது

---

- ஜம்மு காஸ்மீர் மாநிலத்தின் காத்ரா பகுதியில், ஸ்ரீ மாதா வைஷ்னோ தேவி நாராயணா சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையை பிரதமர் திறந்து வைத்தார்.

---

- முன்பதிவு செய்த ரயில் டிக்கெட்டுகளை கேன்சல் செய்வதற்காக, மத்திய ரயில்வே அமைச்சகம், "139" என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவையை அறிமுகம் செய்துள்ளது.

---

- ஜூன் 21ல் நடைபெறவுள்ள சர்வதேச யோகா தினத்தை கொண்டாட சண்டிகர் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

---

- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உஜ்ஜைன் கும்ப மேலா தொடங்கியது.

---

- மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இந்தியாவில் அதிக ஒலி மாசு ஏற்படும் நகரமாக, மும்பை உள்ளது. Noisiest City in India.
- 2,3வது இடம் = லக்னோ, ஹைதராபாத்

## தமிழகம்

- இந்தியாவில் சிலிண்டர் மானியத்தை விட்டு கொடுத்தவர்கள் பட்டியலில், தமிழகம் 5வது இடத்தில உள்ளது

---

- நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் முதல் திருநங்கை என்ற சிறப்பை, தேவி என்றவர் பெற்றுள்ளார். சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில், நாம் தமிழர் கட்சியின் சார்பில் இவர் போட்டியிடுகிறார்.

## உலகம்

- உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, ஒரு நாளைக்கு "1.90" டாலருக்கு குறைவாக வருமானார் பெறுவோர் வறுமை கோட்டிற்கு கீழானவர் ஆவார் (International Poverty Line)

---

- தென் அமெரிக்க நாடான ஈக்குவேடாரில், நிலநடுக்கம் ஏற்பட்டு, ரிக்டர் அளவில் 7.8ஆகா பதிவானது

---

- தாலிபான் தீவரவாதிகள், "ஆபரேசன் ஒமாரி" (Operation Omari) தொடங்கியுள்ளனர். மறைந்த தாலிபான் தலைவனான முல்லா ஓமரின் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் = ஆண்டு போர் பயிற்சி ஒத்திகை.

---

- வில்லியம் ஷேக்ஸ்பியரின் 400வது நினைவு தினத்தை முன்னிட்டு ஆங்கில அரசு அவரின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. இவர் 1616, ஏப்ரல் 23ம் நாள் இறந்தார் என கூறப்படுகிறது.

---

- சவூதி அரேபியாவும், எகிப்தும் இணைந்து, இரு நாடுகளை இணைக்கும் புதிய பாலத்தை, செங்கடல் மீது கட்ட திட்டமிட்டுள்ளன. இப்பாலம், இன்று நாடுகளை மட்டும் இணைக்காமல், இரு கண்டங்களையும் (ஆசியா, ஆப்ரிகா) இணைக்கும்.

---

- "யுனிடோ 2015 ஆண்டு அறிக்கை"யின் (UNIDO 2015 Yearbook Report) படி, உலகின் முன்னணி 10 அதிக உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன் சீனா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. இந்தியா = 6வது இடத்தில உள்ளது.

---

- சர்வதேச நிதி மையம் மற்றும் உலக வங்கி ஆகிய இரு அமைப்புகளிலும் இணையும் 189வது நாடாக, "நவுரு" இணைந்துள்ளது. சுமார் 10500 மக்கள் தொகை உடைய நாடு இது (NAURU becomes 189th member of IMF and World Bank). 188வது நாடாக இணைந்தது = தெற்கு சூடான் ஆகும்

## முதன் முதல்

- சீன விஞ்ஞானிகள், "உலகின் முதல் கிராபின் மின்னணு காகிதத்தை" (World's First Graphene Electronic Paper) உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர்.
- உலகிலேயே கடினமானதும், எடை குறைவானதுமான பொருள் = கிராபின் மட்டுமே (World's Strongest and Lightest Known Material)

---

- இந்திய கிரிக்கெட் சங்கத்தால் உருவாக்கப்பட்ட, "முன்னோடிகள் சங்கத்தில்" (Legendary Club) கிரிக்கெட் விளையாட்டை சாராமல், இணைந்துள்ள முதல் வீரர் என்ற பெருமையை பிரபல பாட்மிட்டன் வீரர் நந்து நடேகர் பெற்றுள்ளார்
- இவருடன் சேர்ந்து 6வது கிரிக்கெட் வீரராக கபில் தேவும் இச்சங்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்
- இதற்கு முன்பு இந்த கவுரவ சங்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள 5 வீரர்கள் = விஜய் மெர்ச்சன்ட், விஜய் ஹசாரே, வினு மண்கட், சுனில் கவாஸ்கர், சச்சின் டெண்டுல்கர்

---

- இந்தியாவின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை ஒருகிணைந்து தகல்களை வழங்கும், இந்தியாவின் முதல் ஆன்லைன் இணைய தளத்தை (sahapedia) மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- இணையதளம் =www.sahapedia.org
- "சாகா" (saha) என்ற சம்ஸ்கிருத சொல்லுக்கு "ஒன்றாக சேர்ந்து" என்று பொருள்

---

- உலக சுகாதார நிறுவனம், உலக மலேரியா நோய் அறிக்கை 2015 வெளியிட்டுள்ளது. இதன் படி மலேரியா நோயை ஒழித்த உலகின் முதல் பகுதி என்ற பெருமையை "ஐரோப்பியா" பெற்றுள்ளது. (World's First region to wipe out Malaria)

---

- ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு என்ற தனி கிளையை தொடங்கியுள்ள முதல் வங்கி (First dedicated branch for start-ups) = ஆர்.பி.எல் வங்கி (RBL Bank) ஆகும், இடம் = பெங்களுரு.

---

- ஜம்மு காஸ்மீர் மாநில அரசு, அம்மாநிலத்தில் முதல் பெண்கள் பேருந்து சேவையை தொடங்கியுள்ளது.

---



www.tnpscwinners.com

- ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற இந்தியாவின் முதல் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை என்ற சிறப்பை, "தீபா கர்மகர்" பெற்றுள்ளார்

---

- "புதிய வளர்ச்சி வங்கி" (New Development Bank) எனப்படும், "பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி" (BRICS Development Bank), தனது முதல் கடனை பிரிக்ஸ் நாடுகளுக்கு வழங்கியுள்ளது. 2370 மில்லியன் வாட் புதுபிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்காக இதனை வழங்கியுள்ளது (Renewable energy capacity)

---

- சிகரெட் அட்டைகளில் 85% புகைப்பட எச்சரிக்கையை வெளியிட்ட முதல் நிறுவனமாக கோல்டன் டோபாகோ நிறுவனம் உள்ளது.
- சிகரெட் அட்டைகள் சட்டத்திருத்த விதி, 2014ன் படி, சிகரட் அட்டைகளில் தற்போது உள்ள 40% புகைப்பட எச்சரிக்கையை விட 85% எச்சரிக்கை புகைப்படத்தை பதிய வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.
- 85% எச்சரிக்கையில், 60% புகைப்படமாகவும், 25% எழுத்து மூலமும் எச்சரிக்கை செய்ய வேண்டும்.

---

- இந்தியாவின் முதல் ஆதார் என் உதவியுடன் செயல்படும் ஏ.டி.எம் இயந்திரத்தை டி.சி.பி வங்கி அறிமுகம் செய்துள்ளது. (India's First Aadhaar based ATM)

---

- உலகின் முதல் மிகப்பெரிய டெங்கு தடுப்பூசி நிகழ்ச்சி (World's First Mass Dengue Vaccination Programme), பிலிப்பைன்ஸ் நாட்டில் நடத்தப்பட்டது. "Dengvaxia" என்ற டெங்கு மருந்தை அங்கீகரித்துள்ள முதல் ஆசிய நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.

---

- ஜம்மு காஸ்மீர் மாநிலத்தின் முதல் பெண் முதலமைச்சராக மெகபூபா முப்தி பதவி ஏற்றார்.

---

- இராஜஸ்தான் மாநிலத்தின், ராஜ்சமந்த் மாவட்டத்தில் உள்ள பீம் தாலுக்காவின் கச்சபாலி கிராமம், அம்மாநிலத்தில் மதுக்கடைகளை மூடிய முதல் கிராமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்தில் கலால் துறையால் நடத்தப்பட்ட ஓட்டெடுப்பில் 90% மேலானோர் மதுக்கடையை மூட ஓட்டளித்ததால், அங்கு கடைகள் மூடப்பட்டன.

---

- முதல் தேசிய பழங்குடியின திருவிழா, புது தில்லியில் நடைபெற்றது (First National Tribal Carnival)

---

- இந்தியாவின் முதல் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்ட ரயில் என்ற சிறப்பை, "சான்-இ-பஞ்சாப்" எக்ஸ்பிரஸ் ரயில் பெற்றுள்ளது.

---

- ஆண்கள் மட்டுமே அனுமதிக்கபட்ட கேரளாவின் தாளதன்கடி ஜும்மா மசூதியில், முதன் முறையாக பெண்களும் அனுமதிக்கப்பட்டனர்.

---

- இந்தியாவின் வறுமையான மாவட்டம் எனப்படும், ஒடிசாவின் "நபாரங்கபூர்" மாவட்டத்தில் முதல் அரசு மாதிரி கல்லூரி தொடங்கப்பட்டது.

---

- டிஜிட்டல் லாக்கர் திட்டத்தை முழுமையாக செயல்படுத்திய இந்தியாவின் முதல் நகராட்சி என்ற சிறப்பை, மகராஷ்டிரா மாநிலத்தின், அகமதுநகர் மாவட்டத்தின், ராகுரி நகராட்சி பெற்றுள்ளது.

---

- குஜராத் மாநிலத்தின் முதல் பெண் டி.ஜி.பி. என்ற பெருமையை கீதா ஜோரி பெற்றுள்ளார்.

---

- காஸ்மீர் மாநிலத்தை சேர்ந்த 7 வயது சிறுமியான, "தஜாமுல் இஸ்லாம்" என்ற சிறுமி, இந்தியாவின் சார்பில், இத்தாலியில் நடைபெறும் உலக கிக்-பாக்சிங் போட்டிகளில் கலந்துக்கொள்ளும் முதல் இந்தியர் ஆவார்.

## இராணுவம்

- இந்திய கப்பற்படை, "ஐ.என்.எஸ். வீர்" மற்றும் "ஐ.என்.எஸ்.நிபட்" ஆகிய இரு போர்க் கப்பலுக்கு ஓய்வளித்துள்ளது.

www.tnpscwinners.com

# Current Affairs - April - 2016

- ஐ.என்.எஸ்.வீர் கபால், இந்திய கப்பற்படையில் 1987ம் ஆண்டு மார்ச் 26ம் தேதி இணைக்கப்பட்டது. இக்கப்பலுக்கு "K40" எனப்பெயரிடப்பட்டது
- ஐ.என்.எஸ் நிபட் கப்பல், இந்திய கப்பற்படையில் 1988ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி சேர்க்கப்பட்டது. இக்கப்பலுக்கு "K42" எனப் பெயரிடப்பட்டது

---

- 11வது இந்திய - மங்கோலிய கூட்டு போர் பயிற்சியான, "Nomadic Elephant 2016" மங்கோலியாவில் நடைபெற்றது.

---

- 22வது இந்திய - தாய்லாந்து கடற்படைகளின் ரோந்து பயிற்சியான "CORPAT", அந்தமான் கடல் பகுதியில் நடைபெற்றது
- CORPAT = Coordinated Patrol

---

- "சத்ருஜீத் பயிற்சி" (Exercise Shatrujeet)
- இந்திய இராணுவத்தினர், இராஜஸ்தான் மாநில பாலைவன பகுதியில் மேற்கொண்ட போர் பயிற்சி இதுவாகும்

---

- வட அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்ற, "செங்கொடி" (Exercise Red Flag) போர் பயிற்சியில், இந்திய விமானப் படை, அமேரிக்க படை மற்றும் நேட்டோ படைகளுடன் இணைந்து பயிற்சியில் கலந்துக் கொண்டது.

---

- பாகிஸ்தான் மற்றும் சீன விமானப் படைகளின் கூட்டு போர் பயிற்சி, "ஷகீன்" (கழுகு) பாக்கிஸ்தானில் நடைபெற்றது.

---

- இந்திய ராணுவத்தின் மேற்கு படைப் பிரிவு, "கியான் சக்ரா" (Gyan Chakra) என்ற புதிய ஆலோசனை பிரிவை தொடங்கியுள்ளது.

---

- "தத் சுரக்ஸா" என்ற கடல் பாதுகாப்பு பயிற்சியை இந்திய கடல் படை, காவல்துறை இணைந்து நடத்தியது.

## அறிவியல், தொழில்நுட்பம்

- இஸ்ரோ விஞ்ஞானிகள், இந்தியாவின் 7வது உளவு செயற்கைக்கோளான, "ஐ.ஆர்.என்.எஸ்.எஸ் - 1ஜி" (IRNSS-1G) செயற்க்கைகோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தினர்.
- ஏப்ரல் 28, 2016 அன்று ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஸ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்பட்டது.
- இது பி.எஸ்.எல்.வி - சி33 (PSLV-C33) ராக்கெட் மூலம் ஏவப்பட்டது
- IRNSS = Indian Regional Navigational Satellite System
- PSLV = Polar Satellite Launch Vehicle

---

- வட அமெரிக்காவில் ஏப்ரல் மாதம் தென்ப்படும் முழு நிலா சாதாரண காலங்களில் தென்படும் முழுநிலவை காட்டிலும் சிறியதாக தென்படும்.
- இந்த ஏப்ரல் மாத நிலாவை, அங்கு "முழு இளஞ்சிவப்பு நிலா" (Full Pink Moon) என்றும், "சிறு நிலா" (Mini Moon) என்றும் "நுண் நிலா" (Micro Moon) என்றும் கூறுவர்.
- திருவனந்தபுரத்தில் உள்ள இஸ்ரோ மையத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள், உலகின் எடை குறைவான சிந்தெடிக் (செயற்கையான) பொருளை உருவாக்கி உள்ளனர் (World's Lightest Synthetic Material)
- அப்பொருள் = சிலிகா ஏரோஜெல் (Silica Aerogel) (or) blue air (or) frozen smoke

---

- "பரம் கஞ்சன்ஜங்கா" (Param Kanchenjunga) என்ற புதிய அதிவிரைவான சூப்பர் கணிணி (Super Computer), சிக்கிம் மாநிலத்தில் உள்ள தேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நிறுவப் பட்டுள்ளது. கஞ்சன்ஜங்கா என்பது உலகின் மூன்றாவது மிகப்பெரிய மலை ஆகும் (உயரம் = 8586 மீ)

---

- இன்போசிஸ் நிறுவனர்களில் ஒருவரான கிரிஸ் கோபாலகிருஷ்ணன், என்பவரால் கடந்த 60 ஆண்டுகால இந்திய தொழில்நுட்ப துறையின் வளர்ச்சியை விளக்கும், "இதிஹாசா" (ITHIHAASA) என்ற அப்ளிகேசன் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு, "டிஜிட்டல் அருங்காட்சியகம்" (Digital Museum) ஆகும்

---



www.tnpscwinners.com

- மைசூரில் செயல்படும், மத்திய பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி மையமும் (Central Sericulture Research and Training Institute), மத்திய பட்டு வாரியமும் (Central Silk Board) இணைந்து, "NEMHARI" என்ற தாவரத்தை உருவாக்கியுள்ளனர். இச்செடியை ஆய்வு செய்ததில், 84% நோய் தொற்றுக்கு உட்படாமல் இருப்பதும், 24% அளவிற்கு இலை சார்ந்த நோய்களில் இருந்து தடுப்பதும் தெரிய வந்துள்ளது. இதன் மூலம் பட்டு வளர்ச்சி அதிகப்படுத்தப் முடியும்.

---

- சீன ஆராய்ச்சியாளர்கள், எல்லா பருவங்களிலும் செயல்படும் சூரிய ஆற்றல் செல்களை (all weather solar cell) உருவாக்கியுள்ளனர். இது மலை காலங்களில் கூட சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும்.
- "கிராப்பீன்" (Graphene) என்ற பொருளை பயன்படுத்தி இதனை உருவாக்கியுள்ளனர்.
- கிராப்பீன், என்பது கார்பனின் 2 பரிமாண வடிவாகும். இதன் அணுக்கள், தேன்கூடு வடிவில் பிணைக்கப்பட்டிருக்கும். (2D form of Carbon, in which atoms are bonded into a honeycomb arrangement)

---

- ஜார்ஜியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், உலகின் மிகச் சிறிய டையோடை (Diode) கண்டுபிடித்துள்ளனர். இதற்கு Nano scale Diode or Molecular Rectifier என பெயரிட்டுள்ளனர்.

---

- அஸ்ஸாம் மாநிலத்தின் குவஹாத்தியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக (Institute of Advanced Study in Science and Technology – IASST) ஆராய்ச்சியாளர்கள், தண்ணீரை மென்மையாக்க நானோ தொழில்நுட்பத்தில் புதிய முறையை உருவாக்கியுள்ளனர். இம்முறையில் தண்ணீரில் உள்ள கால்சியம் மற்றும் மெக்னீசியம் துகள்கள் நீக்கப்பட்டு தண்ணீர் தூய்மை ஆக்கப்படுகிறது.

---

- மத்திய அரசு, "வித்யுத் பிரவா" என்ற புதிய மொபைல் அப்ளிகேசன் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இது மின்சாரம், அதன் குறித்த தகவல்களை அளிக்கிறது.

## இடங்கள்

- இந்தியா, ரஷ்யா மற்றும் சீன ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டம், மாஸ்கோ நகரில் நடைபெற்றது.

---

- உலகில் மிகப்பெரிய மின்-வணிக நிறுவனமான அமேசான், அமெரிக்காவிற்கு வெளியே தனது மிகப்பெரிய வணிக அலுவலகத்தை ஹைதராபாத்தில் துவங்குகிறது.

---

- இந்திய நீர் வாரம் (Indian Water Week 2016) மற்றும் தேசிய நீர் திரைப்பட திருவிழா (2016 Water Film Festival) ஆகியவை, புது தில்லியில் நடைபெற்றது

## விருதுகள்

- பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கை சேர்ந்த, பெண் மனித உரிமை போராளியான, "தபசும் அத்னான்" அவர்களுக்கு "நெல்சன் மண்டேலா - கிரகா மச்சேல் புதுமை விருது" வழங்கப்பட்டது. (Nelson Mandela – Graca Machel Innovation Award)

---

- "2015ம் ஆண்டிற்கான சிறந்த வங்கி பண விருது" (Bank Note of the Year Award 2015), நியூசிலாந்து நாட்டின் 5 டாலர் மதிப்புடைய பணத்திற்கு வழங்கப்பட்டது.

---

- "சர்வதேச தாவர ஊட்டச்சத்து அறிஞர் விருது" (International Plant Nutrition Scholar Award), இந்தியாவின் அசோக் குமார் (K. Ashok Kumar) அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் கரக்பூர் இந்திய தொழில்நுட்ப பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் ஆவார்.

---

- பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான, "Order of Arts and Letters Honour of France" எனும் விருது, காந்திஜியின் பேத்தியான



www.tnpscwinners.com

தாரா காந்தி பட்டாசார்ஜி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

---

- நாடக பிரிவிற்கான 2016ம் ஆண்டின் புலிட்சர் விருது, மேனுவல் மிரண்டா என்பவர் எழுதிய "ஹாமில்டன்" என்ற புத்தகத்திற்கு வழங்கப்பட்டது (Pulitzer Prize for Drama – Hamilton)

---

- சிறந்த கற்பனை படைப்பு பிரிவிற்கான 2016ம் ஆண்டிற்கான புலிட்சர் விருது, வியட் தான் நிகுயென் என்பவர் படைத்த "தி சிம்பதைசர்" என்ற படைப்பிற்கு வழங்கப்பட்டது (Pulitzer Prize for Fiction – The Sympathizer)

---

- "ஜார்ஜ் க்ரியர்சன் விருது" (George Grierson Award), ஹிந்தி மொழி வளர்ச்சிகு உதவிய சீனப் பேராசிரியர் "ஜி புபிங்" (Ge Fuping) என்பவருக்கு வழங்கப்பட்டது

---

- 2016ம் ஆண்டிற்கான ஹிருதயநாத் மங்கேஷ்கர் விருது, விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

---

- 2015ம் ஆண்டின் "சரஸ்வதி சம்மான்" விருது, எழுத்தாளரும் பெண் கவிஞருமான "பத்மா சச்தேவ்" அவர்களுக்கு, வழங்கப்பட்டது. தோன்க்ரி மொழியில், எழுதப்பட்ட அவரின் வாழ்க்கை வரலாறு நூலான, "சித்-சேதே" என்ற நூலுக்காக வழங்கப்பட்டது.
- 2014ல் வீரப்ப மொய்லி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

---

- பிரபல, இந்தி நடிகை ஐஸ்வர்யா ராய் பச்சன் அவர்களுக்கு, "Global Indian of the Year 2016" விருது வழங்கப்பட்டது.

---

- "யுனஸ்கோவின் பத்திரிக்கை சுதந்திர விருது", (UNESCO or Guillermo Cano World Press Freedom Prize 2016) அசர்பெகிஸ்தான் நாட்டின் கடிஜா இஸ்மாயிலோவா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

---

- பெமினா மிஸ் இந்தியா 2016 ஆக, டெல்லியை சேர்ந்த பிரியதர்ஷினி சட்டர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (FBB Femina Miss India 2016)

---

- தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் வழங்கினார். தேசிய சிறப்பு புவி அறிவியல் விருது (National Geo Science Award for Excellence), அசோக் குமார் சிங்வி என்ற பேராசிரியருக்கு வழங்கப்பட்டது. வண்டல் தொழில்நுட்பத்தில் (Sedimentary Technologies) சிறப்பாக செயலாற்றியதற்காக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

---

- "பென் / பார்பி சுதந்திர விருது", எகிப்தை சேர்ந்த நாவலாசிரியரான அகமது நகி அவர்களுக்கு வழங்கப்பட்டது. (PEN/Barbey Freedom to Write Award)

---

- "தேசிய அறிவுசார் உடைமை விருது", கரக்பூர் இந்திய தொழில்நுட்ப கழகத்திற்கு வழங்கப்பட்டது.

---

- ஜப்பான் நாட்டின் உயரிய விருதான, "Order of the Rising Sun, Gold and Silver" விருது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான நந்த கிஷோர் சிங் அவர்களுக்கு வழங்கப்பட்டது

---

- இந்தியாவிலேயே சிறந்த கிராம பஞ்சாயத்து என்ற விருதை, தெலுங்கானா மாநிலத்தின், கரிம்நகர் மாவட்ட பாலுமல்லுபள்ளி பஞ்சாயத்து பெற்றது.

---

- மாஸ்டர் தினாநாத் மங்கேஷ்கர் வாழ்நாள் சாதனையாளர் விருது, பிரபல ஹிந்தி நடிகர் ஜிதேந்த்ரா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

---

- 9வது மாஸ்கோ மணல் சிற்ப சாம்பியன்சிப் போட்டிகள், ரசியாவின் மாஸ்கோ நகரில் நடைபெற்றது. இதில் இதியாவின் பிரபல மணல் சிற்பியான சுதர்ஷன் பட்நாயக், 15 அடி உயர காந்தி சிற்பத்தை மணலில் உருவாக்கி சாம்பியன் பட்டம் பெற்றார்.

## மாநாடுகள்

# Current Affairs - April - 2016

- 6வது "ஆசியாவின் இதயம்" (Heart of Asia) கருத்தரங்கம், புதுதில்லியில் நடைபெற்றது
- 5வது கருத்தரங்கம் 2015ல் பாகிஸ்தானில் நடைபெற்றது.

---

- 13வது இஸ்லாமிய உச்சிமாநாடு, துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது.(13th Islamic Summit Conference)

---

- பாரத பிரதமர், "தேசிய கடல்சார் மாநாட்டை", மும்பையில் தொடங்கி வைத்தார். (National Maritime Summit 2016)

---

- புலிகள் பாதுகாப்பு தொடர்பான 3வது ஆசிய அமைச்சர்கள் கருத்தரங்கம் (3rd Asia Ministerial Conference on Tiger Cnservation), புது தில்லியில் நடைபெற்றது. உலகிலேயே அதிக புலிகள் உள்ள நாடாக இந்தியா உள்ளது.

---

- இரண்டு நாள் ஜி-7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு, ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நடைபெற்றது.

---

- முதல் வடகிழக்கு - ஆசியான் தொழில் உச்சிமாநாடு, மணிபூர் மாநில இம்பால் நகரில் நடைபெற்றது. (First North East – ASEAN Business Summit)

---

- குடும்ப கட்டுப்பாடு தொடர்பான தேசிய மாநாடு (National Summit on Family Planning), புது தில்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கரு = New Choices, New Horizons. இம்மாநாட்டில் Post Partum Sterilization என்ற பிரிவில் தமிழக அரசிற்கு விருது வழங்கப்பட்டது.

---

- "சர்வதேச பூஜிய கருத்தரங்கம்" (International Zero Cnference), பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள மேரி கியூரி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இவ்விடத்தில் இந்திய கணிதவியாலரும் வானவியல் அறிஞருமான ஆரியபட்டரின் வெண்கல சிலை திறந்து வைக்கப்பட்டது.

---

- 4வது அணு பாதுகாப்பு மாநாடு , அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெற்றது. முதல் மூன்று மாநாடுகள் நடைபெற்ற இடம் = வாஷிங்டன், சியோல், ஹேக்

---

## நாட்கள்

- ஏப்ரல் 2 = உலக மண இருக்க விழிப்புணர்வு தினம்
- கரு = Autism and the 2030 Agenda : Inclusion and Neurdiversity

---

- ஏப்ரல் 6 = International Day of Sport for Development and Peace
- 1896ம் ஆண்டு முதல் நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஏப்ரல் 6ம் தேதி தொடங்கியதை முன்னிட்டு இந்நாள் கொண்டாடப்படுகிறது.

---

- ஏப்ரல் 7 = உலக ஆரோக்கிய தினம்
- கரு = Halt the Rise : Beat Diabetes

---

- ஏப்ரல் 10 = உலக ஹோமியோபதி தினம்
- ஏப்ரல் 10 = ஹோமியோபதியின் தந்தை (Father of Homeopathy) எனப்படும் சாமுவல் ஹானேமண் அவர்களின் பிறந்த தினம்

---

- ஏப்ரல் 12 = சர்வதேச விண்வெளி மனித பயண நாள் (International Day of Human Space Flight)
- விண்வெளிக்கு முதலில் பயணித்த ரஸ்சியாவின் யூரி ககாரினின் நினைவாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- இதுவரை விண்வெளிக்கு 536 நபர்கள் சென்று வந்துள்ளனர்.

---

- ஏப்ரல் 17 = உலக இரத்த உரையாமை நோய் தினம் (World Hemophilia Day)
- கரு = Treatment For All is The Vision of All
- இரத்த உரையாமை நோய் ஜீன் குறைபாடுகளால் ஏற்படுகிறது. (Gene Mutation)

---

- ஏப்ரல் 18 = உலக பாரம்பரிய தினம் (World Heritage Day) or International Day for Monuments and Sites (சர்வதேச நினைவு சின்னங்கள் தினம்)
- கரு = The Heritage of Sport



www.tnpscwinners.com

---

- ஏப்ரல் 22 = சர்வதேச பூமி தினம் (International Mother Earth Day)
- கரு = Trees for the Earth

---

- ஏப்ரல் 23 = உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் (World Book and Copyright Day)
- 2016ம் ஆண்டின் உலக புத்தக தலைநகராக, போலந்து நாட்டின் ரோக்லாவ் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது (2016 World Book Capital)

---

- ஏப்ரல் 25 = உலக மலேரியா தினம் (World Malaria Day)
- கரு = End Malaria for Good

---

- ஏப்ரல் 26 = உலக அறிவுசார் உடைமை தினம் (World Intellectual Property Day)
- கரு = Digital Creativity : Culture Reimagined

---

- 24 - 30 = உலக நோய்த்தடுப்பு வாரம் (World Immunization Week)
- 2020ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தடுப்பூசி இடவேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

## புத்தகம்

- “கிசாலே பட்டாச்சார்ஜி என்பவர் “Blood on My Hands : Confessions of Staged Encounters“ என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- கர்தார் லால்வாணி என்பவர், “The Making of India : The Untold Story of British Enterprises“ என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- பி.ஜி. வெர்கீஸ் என்பவர், “A State in Denail – Pakistan’s Misguided and Dangerous Crusade“ என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- நாசா விண்வெளியாளரான, “ஸ்காட் கெல்லி” என்பவர், “Endurance : My Year in Space and Our Journey to Mars” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

---

- இம்ரான் ஆஸ்மி மற்றும் பிலால் சித்திக் ஆகியோர், “The Kiss of Life : How a Superhero and My Son Defeated Cancer” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டனர்

---

- இந்திய பாராளுமன்ற உறுப்பினரான, பா.சிதம்பரம், அவர்கள் “Standing Guard – A Year in Opposition“ என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- ஸ்ரீநாத் ராகவன் என்பவர், “India’s War : The Making of Modern South Asia 1939 - 1945” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- முகமது ஆமிர் கான் என்பவர், “Framed as a Terrorist : My 14 Year old Struggle to Prove my Innocence” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

---

- ஜேம்ஸ் கிராஸ் ஜிப்ளின், என்பவர் “The Life and Death of Adolf Hitler” என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

---

- அர்ஜுன் நாத் சக்கு என்பவர், “The Story of Kashmir through the Ages” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.

---

- உடுப்பி ராஜகோபாலச்சார்யா ஆனந்தமூர்த்தி என்பவர், “இந்துத்துவா அல்லது ஹிந்து சுயராஜ்யம்” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.

---

- எஸ்.கே. மிஸ்ரா என்பவர், “Flying in High Winds : A Memoir” என்ற புத்தகத்தை எழுதி உள்ளார்.

---

- அனிதா நாயர், “Alphabet Soup for Lovers” என்ற புத்தகத்தை எழுதி உள்ளார்.

---

- துஷர் அகர்வால், “The Great Indian World Trip” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

---

- “No Time to Pause” என்ற புத்தகத்தை பவித்ரா ரமேஸ் என்பவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

## புயல், வறட்சி

- மத்திய அமேரிக்க நாடான, “எல் சல்வாடார்” நாட்டில் முதன் முறையாக



www.tnpscwinners.com

தண்ணீர் பஞ்சம் காரணமாக அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## விளையாட்டு

- மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற உள்ளூர் டுவென்டி - 20 கிரிக்கெட் போட்டியில், டொபாகோ அணி வீரர், "ஈராக் தாமஸ்" (Iraq Thomas) என்பவர் 21 பந்துகளில் சதமடித்து புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

---

- 2020ம் ஆண்டில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் மற்றும் பாரா-ஒலிம்பிக் போட்டிகளுக்கான சின்னம் (Logo) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது
- இதற்கான சின்னதாய் "அசா டோகோலோ" என்பவர் வடிவமைத்துள்ளார்
- இண்டிகோ நிறத்துடன் கொடிய கட்டங்கள் உள்ளடக்கிய வட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது (Indigo coloured checkered circular pattern)

---

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், நேபாள கிரிக்கெட் சங்கத்தை தற்காலிகமாக நீக்கம் செய்துள்ளது. கிரிக்கெட் சங்கத்தில் அந்நாட்டு அரசின் தலையீடு இருப்பதாக கருதி இம்முடிவை எடுத்துள்ளது.

---

- மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் இவ்வாண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள இந்திய வீரர்களின் பயிற்சிக்காக மாதா மாதம் ஒவ்வொரு வீரருக்கும் ஒரு லட்ச ரூபாய் வழங்குகிறது.

---

- இந்திய ஜூடோ கழகம், 2018ல் நடைபெறவுள்ள காமன்வெல்த் ஜூடோ சாம்பியன்ஷிப் (Commonwealth Judo Championship 2018) போட்டிகளை இந்தியாவில் நடத்த அனுமதி பெற்றுள்ளது. இந்தியாவில் சர்வதேச ஜூடோ போட்டிகளில் நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும். இப்போட்டிகள் ஜெய்பூர் நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

- பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால், ஜப்பானின் நிஷிகோரியை வீழ்த்தி 9வது முறையாக பட்டம் வென்றார்

---

- மலேசியாவின் இபோ நகரில் நடைபெற்ற 25வது சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பையின் இறுதி போட்டியில், ஆஸ்திரேலியா அணி இந்திய அணியை தோற்கடித்து 9வது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

---

- மாண்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால், பிரெஞ்சு வீரரான கயல் மான்பில்சை வீழ்த்தி சாம்பியன் பட்டம் பெற்றார்.

---

- இந்த வருடத்திற்கான விஸ்டன் கிரிக்கெட் வீரராக, நியுசிலாந்து நாட்டின் கேன் வில்லியம்சன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

- அமெரிக்காவின் ஜார்ஜியாவில் நடைபெற்ற 2016ம் ஆண்டின் யு.எஸ் மாஸ்டர்ஸ் கோல்ப் சாம்பியன்ஷிப் பட்டியில் டேனி வில்லேட் என்பவே வெற்றி பெற்றார்.

---

- ஆசிய செஸ் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, வியட்நாம் அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது.

---

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், உலக டி20 அணியை அறிவித்துள்ளது. ஆண்கள் அணிக்கு இந்திய வீரர் விராட் கோலி கேப்டனாகவும், பெண்கள் அணிக்கு மேற்கிந்திய தீவுகளின் ஸ்டெப்பனி டைலோர் கேப்டனாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆண்கள் அணியில் இந்தியாவில் இருந்து விராட் கோலி மற்றும் ஆசிஸ் நெக்ரா மட்டுமே தேர்வாகி உள்ளனர்.

---

- 2016ம் ஆண்டிற்கான பெண்கள் டி-20 உலகக் கோப்பையை மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. இறுதி ஆட்டத்தில்


www.tnpscwinners.com

ஆஸ்திரேலிய அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது

---

- 2016ம் ஆண்டிற்கான ஆண்கள் டி-20 உலகக் கோப்பையை மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது. இறுதி போட்டியின் ஆட்ட நாயகன் விருது, மேற்கிந்திய தீவுகள் வீரர் மார்லன் சாமுவேல்ஸ் அவர்களுக்கும், தொடர் நாயகன் விருது இந்திய வீரர் விராட் கோலிக்கும் வழங்கப்பட்டது.

---

- 40வது பாரிஸ் மாரத்தான் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் கென்யாவின் சிப்ரியன் கொடுட் என்பவர் வெற்றி பெற்றார். பெண்கள் பிரிவில் கென்யாவின் விசிலைன் ஜெப்கோசோ வெற்றி பெற்றார்.

## இறப்பு

- அரசியல்வாதிகளால் தாக்கப்பட்ட உத்திரக்கான்ட் மாநில போலிஸ் குதிரை சிகிச்சை பலனின்றி இறந்தது
- இக்குதிரைக்கு "சக்திமான்" எனப் பெயரிட்டிருந்தனர்.

---

- பிரபல ஹீரோ குழும நிறுவனங்களின் நிறுவனர்களில் ஒருவரான சத்யானந்த் முன்ஜால் காலமானார்

---

- மெட்ராஸ் அணு உலை மையத்தை உருவாக்கிய சிற்பி எனப்போற்றப்படும் மைனேனி ஹரி பிரசாத் காலமானார். (Father of Architect of Madras Atomic Power Station)

---

- இந்தியாவின் முதல் பெண் பைக் ஓட்டுனரான, "வீனு பளிவால்", காலமானார்.

## குழு

- ஷியாம் பெனகல் குழு (Shyam Benagal Panel)
- மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தை (Central Bard of Film Certification) மாற்றியமைக்க, ஷியாம் பெனகல் தலைமையிலான குழு அமைக்கப்பட்டது
- அக்குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது

---

- திவாகர் ரெட்டி குழு (JC Divakar Reddy Committee)
- திவாகர் ரெட்டி தலைமையிலான குழு, "நுகர்வோர் பாதுகாப்பு மசோதா" (Consumer Protection Bill 2015) தொடர்பான தனது அறிக்கையை பாராளுமன்ற நிலைக்குழு முன் சமர்ப்பித்தது
- இக்குழு, தனது அறிக்கையில், "சமூகத்தில் மிகப் பிரபலமானவர்கள், விளம்பரங்களில் நடிக்கும் பொழுது, அப்பொருட்களின் தரத்தினை அறியாமல் தவறான தகவல்களை பரப்பினால் அவர்களுக்கு 5 ஆண்டு வரை சிறை தண்டனையுடன் 50 லட்சம் அபராதம் விதிக்கவும் பரிந்துரைத்துள்ளது".

---

- அசோக் தல்வாய் குழு (Ashok Dalwai Panel)
- மத்திய அரசு 2022ம் ஆண்டிற்குள், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கான திட்ட வரைவை உருவாக்க அசோக் தல்வாய் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது (Doubling Farmers Income by 2022)

---

- பி.பி. தாண்டன் குழு
- அரசு விளம்பரப்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை சரியாக பின்பற்றப்படுகிறதா என ஆராய தாண்டன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

---

- மதுக்கர் குப்தா குழு (Madhukar Gupta Panel)
- இந்தியா - பாகிஸ்தான் எல்லை பகுதியில் உள்ள எல்லைகளை பாதுகாப்பு மிக்கதாக மாற்ற வழிமுறைகளை வழங்க மதுக்கர் குப்தா தலைமையில் குழு அமைக்கப் பட்டுள்ளது.

---

- டாக்டர். அசோக் லகரி குழு
- மத்திய அரசு, ஆபரண நகைகள் மீதான கலால் வரி விதிப்பை, செயல்படுத்துதல்

www.tnpscwinners.com

தொடர்பாக, அசோக் லகரி தலைமையில் குழு அமைத்துள்ளது.

## திட்டங்கள்

- மத்திய அரசு, "ஸ்டார்ட் அப் இந்தியா" திட்டத்தின் ஒரு பகுதியாக, இணையதள சேவையையும், மொபைல் அப்ளிகேஷனையும் அறிமுகம் செய்துள்ளது
- அதற்கான இணையதளம் = www.startupindia.gov.in
- ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம், பிரதமர் மோடியால், ஜனவரி 16, 2016ல் தொடங்கி வைக்கப்பட்டது

---

- மத்திய எரிசக்தி துறை அமைச்சர், "பியுஷ் கோயல்", ஏப்ரல் 30ம் தேதி, மத்தியப் பிரதேச மாநிலத்தில் "உஜாலா" (UJALA) திட்டத்தை தொடங்கி வைத்தார்
- இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு 77 கோடி எல்.இ.டி (LED – Light Emitting Diode) விளக்குகளை வழங்குகிறது
- UJALA = Unnat Jyoti by Affordable LEDs for all
- உஜாலா திட்டம், பயனாளிகளின் மாத மின்சார கட்டணத்தை குறைப்பதுடன், நாட்டின் ஆற்றல் பாதுகாப்பிற்கும் உதவுகிறது
- உஜாலா திட்டத்தை கண்காணிக்க, மத்திய அரசு, www.delp.in என்ற இணையதளத்தை தொடங்கியுள்ளது
- DELP = LED based Domestic Efficient Lightning Programme

---

- நபார்டு வங்கி (NABARD), ஜெர்மனி அரசுடன் இணைந்து, "உணவு பாதுகாப்பிற்காக, மண்ணை பாதுகாத்தல் மற்றும் புனர்வாழ்வு அளித்தல்" (Soil Protection and Rehabilitation for Food Security) என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ஜெர்மனி அரசு தொடங்கியுள்ள, "பசியில்லா ஒரே உலகு" (One World, No Hunger) என்ற திட்டத்தில் இணைந்துள்ள ஒரே ஆசிய நாடு இந்தியா மட்டுமே.
- NABARD = National Bank for Agriculture and Rural Development

---

- கேரளா மாநிலத்தின் கோழிக்கோடு மாவட்டத்தில், வறுமையை ஒழிப்பதற்காக, "ஆபரேசன் சூலைமணி" (Operation Sulaimani) என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது
- இத்திட்டத்தின் நோக்கம், அம்மாவட்டத்தில் உணவு வீணாவதை தடுத்து, உணவு இல்லாதவர்களுக்கு உணவளித்தல் ஆகும். (avoid food wastage)

---

- விஜய குமார் மற்றும் அனுராக் சக்சேனா என்ற இரண்டு வெளிநாட்டு வாழ் இந்தியர்கள், "India Pride Project - IPP" என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளனர்
- இதன் நோக்கம், இந்தியாவில் இருந்து காணாமல் போன, எடுத்து செல்லப்பட்ட கலை, பொக்கிச பொருட்களை மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு வருதல்.

---

- மத்திய விளையாட்டு துறை அமைச்சகம், "ராஜீவ் காந்தி கேல் அபியான்" (Rajiv Gandhi Khel Abhiyaan) திட்டத்தை "கேல் இந்தியா" (Khel India) திட்டத்துடன் இணைத்துள்ளது.

---

- இந்திய பிரதமர், "தேசிய விவசாய சந்தையை" (National Agriculture Market) தொடங்கிவைத்தார். விவச்சாயிகளின் வருமானத்தை பெருக்க, இணையதளம் மூலம் தங்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கான இணையதளம், www.enam.gov.in

---

- ஜார்கண்ட் மாநில அரசு, விதவைகளுக்காக, "பிமராவ் அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், விதவைகளுக்காக மாநிலம் முழுவதும் 11000 இலவச வீடுகளை கட்டித்தருவதாகும்.

---

- மத்தியப்பிரதேச மாநில மவ் என்னுமிடத்தில், அம்பேத்கரின் 125வது பிறந்த தினத்தை முன்னிட்டு, பாரத பிரதமர், "Gram Uday Se Bharat Uday Abhiyaan" என்ற இயக்கத்தை தொடங்கி வைத்தார்.
- நாடு முழுவதும் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் =


www.tnpscwinners.com

சமூக நல்லிணக்கம், பஞ்சாயத்து அமைப்புகளை வலிமையாக்குதல், ஊரக வளர்ச்சியை வலிமையாக்குதல் மற்றும் விவசாயிகளின் தரத்தை உயர்த்துதல் (Social Harmony, Strengthening of Panchayat Raj and Rural Development, and Farmer's Progress)

---

- தேசிய நீரியல் திட்டதிற்கு (National Hydrology Project) மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக 3679 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் 3640 கோடி ரூபாய் நீரியல் திட்டத்திற்கும், 39 கோடி ரூபாய் தேசிய நீர் தகவல் மையத்திற்கும் (National Water Informatics Centre) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

- ஒடிஸா மாநில அரசு, "ஓடிஸா ஆதர்ஸ் வித்யாலயா திட்டத்தை" அறிவித்துள்ளது. இதன் நோக்கம் கேந்த்ரிய வித்யாலயா பள்ளிகளை போன்ற மாதிரி பள்ளிகளை மாநிலத்தின் ஊரக பகுதிகளில் அமைத்தல் ஆகும்.

---

- பாரத பிரதமர் ஏப்ரல் 5ம் தேதி, நொய்டாவில்,"ஸ்டான்ட் அப் இந்தியா" திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் நோக்கம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தி தலில் தொடங்க வைத்தல்.

---

- பிரதம மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக நொய்டாவில் நடந்த விழாவில், பிரதமர், "கவுஷல் கேந்த்ரா" (திறன் மையங்கள்) தொடங்கி வைத்தார்.

---

- "மிஷன் இந்திரதனுஷ்", திட்டத்தின் மூன்றாம் பகுதி தொடங்கப்பட்டது. இது ஒரு நாடு தழுவிய தடுப்பூசி திட்டமாகும்.
- இத்திட்டத்தின் நோக்கம் 2020ம் ஆண்டிற்குள், நாடுமுழுவதும் உள்ள குழந்தைகளுக்கு கொடிய 7 நோய்களில் இருந்த காப்பாற்ற தடுப்பூசி போடுதல்.
- 7 நோய்கள் = டிப்தீரியா (தண்டை அழற்சி நோய்), கக்குவான் இருமல், கிட்டிப் போடும் நோய், போலியோ, காசநோய், தட்டம்மை மற்றும் ஹெபடிடிஸ் பி

---

- உத்திரப்பிரதேச மாநில போலீசார், "ஆபரேசன் மிலன்" (Operation Milan) என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளனர். இதன் நோக்கம், காணாமல் போன சிறுவர், சிறுமியர்களை கண்டுபிடித்து அவர்கள் குடும்பத்துடன் சேர்த்து வைத்தல்.

---

- மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு, புது தில்லியில், "நம்ம கழிப்பறை" (Namma Toilet) என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- நம்ம கழிப்பறை திட்டம், முன்னாள் ஜனாதிபதி திரு அப்துல் கலாம் அவர்களின் திட்டமாகும்.

---

- "ஸ்வதார் கிரே" திட்டத்தின் கீழ் மத்திய அரசு, உத்திரப்பிரதேச மானியால்தின் மதுராவில் விதவைகளுக்காக 1000 வீடுகளை கட்டித்தரும் திட்டத்தை தொடங்கியுள்ளது

## ஒப்பந்தம்

- பூட்டான் அரசுடன் இணைந்து தொழில்நுட்ப ரீதியாக செயல்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தம், "இந்திய - பூட்டான் நட்பு உடன்படிக்கை 2007" படி உருவாக்கப்பட்டது (India – Bhutan Friendship Treaty 2007)

---

- துறைமுகம், துறைமுகம் சார்ந்த தொழில்களில், இணைந்து செயல்பட இந்தியாவும், தென் கொரியாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன

---

- வட இலங்கையில் வாழும் 150 தமிழர்களுக்கு மீன்பிடி படகுகளையும், மீன்பிடி சார்ந்த உபகரணங்களையும் வழங்கும் ஒப்பந்தத்தில் இந்தியா



www.tnpscwinners.com

இலங்கையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

## நியமனம்

- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு, இந்தியாவை சேர்ந்த பெண் ஹாக்கி நடுவரான "துர்கா தாக்கூர்", என்பவரை சர்வதேச நடுவராக நியமித்துள்ளது.

---

- மத்திய அரசு, "தேசிய நினைவுச் சின்ன ஆணையத்தின்" (National Monuments Authority) தலைவராக சுஸ்மிதா பாண்டே அவர்களை நியமித்துள்ளது.

---

- மத்திய அரசு, "திறன் இந்தியா" திட்டத்தின் ஒரு பகுதியான, "I Support Skill India" இயக்கத்திற்கு, கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் அவர்களை தூதராக நியமித்துள்ளது.

---

- மத்திய நிர்வாகத் தீர்பாயத்தின் (Central Administrative Tribunal) தலைவராக, முன்னால் நீதிபதி, "பெர்மூத் கோலி" நியமனம். மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம், 1985ல் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லி. மேலும் 17 மாநிலங்களில் இதன் கிளை அமர்வுகள் உள்ளன.
- இந்திய அரசியல் அமைப்பின் பகுதி "14அ"ல், விதி 323அ, நிர்வாகத் தீர்ப்பாயத்தை குறிக்கிறது.
- பகுதி "14அ", 1976ம் ஆண்டு, 42வது சட்டத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது.

---

- "நாஸ்காம்" அமைப்பின் தலைவராக திரு. சி.பி.குல்கர்னி நியமனம். NASSCOM =The National Association of Software and Services Companies.

---

- இந்திய நேரடி விற்பனை கூட்டமைப்பின் தலைவராக திரு ஜிதேந்திர ஜகோடா நியமனம் செய்யப்பட்டுள்ளார். (IDSA = Indian Direct Selling Association)

---

- சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு, நடைபெறவுள்ள பெண்கள் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளின் தூதராக இந்திய வீராங்கனை மேரி கோம் அவர்களை நியமித்துள்ளது.

---

- 2016 ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டிகளுக்கான நல்லெண்ண தூதராக, இந்தியாவில் சார்பில் பாலிவுட் நடிகர் சல்மான் கான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

---

www.tnpscwinners.com